**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.174/2022 வா.சா.1 பத்மாவதி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 26.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என் சொத்தும் என் சொத்துக்கு அருகில் உள்ள பாலசந்திரன் சொத்தும் பிரதிவாதி சொத்தும் ஆதியில் ஆறுமுக செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆறுமுக செட்டியார் தனது சொத்தில் வடபுறம் உள்ள சொத்தை வா.சா.ஆ. 13 கிரைய ஆவணப்படி 28.10.1958 அன்று கந்தசாமி செட்டியார் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மீதமிருந்த தென்புற சொத்தை ஆறுமுக செட்டியார் தனக்கென வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் கந்தசாமி செட்டியாருக்கு கொடுத்த சொத்திற்கு தடமாக தென்புறம் இருந்த ஆறுமுக செட்டியாரின் சொத்தின் மேல்கோட்டில் தென்வடலாக தடபாத்தியம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ. 13 கிரைய ஆவணத்தில் மேற்படி தடபாத்தியம் *"வண்டி கால்நடை ஆள் வகையறா நடந்து கொள்ள வேண்டியது "* என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். கந்தசாமி செட்டியார் மேற்படி கிரைய ஆவணத்தில் வாங்கிய சொத்தை தன் இரு மகன்களான பாலசந்திரன், சதாசிவம் ஆகியோருக்கு 24-05-1959 தேதியிட்ட வா.சா.ஆ. 1 செட்டில்மெண்ட் ஆவணப்படி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் மேற்படி தடபாத்தியம் *"ஆறுமுகம் செட்டியார் பு ஏ 1.73 விஸ்திரண்முள்ள பூமியின் மேல்கோட்டில் தென்வடலாக இட்டேரியிலிருந்து ஷை பூமிக்கு வண்டி கால்நடை ஆள்வகையறா நடந்து கொள்ள வேண்டிய பாத்தியமும் சகிதம்."* என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1959

காலகட்டத்தில் வண்டி என்று மாட்டு வண்டியை தான் குறிப்பிட்டு இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கால்நடை என குறிப்பிடப்படுவது ஆடு, மாடு தான் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் மாட்டு வண்டி கால்நடை சென்று வர தடத்தின் அகலம் சுமார் 4-5 அடி தான் இருந்திருக்கும் என்றால் சரியல்ல . சுமார் 7-8 அடி வரை கூட இருக்கும்.

3) மேற்படி சதாசிவம் சொத்தை வா.சா.ஆ. 1 ஆவணப்படி பெற்ற பின் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி சதாசிவத்தின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளும் பாலசந்திரனும் கடந்த 15-07-2020 அன்று வா.சா.ஆ. 2 பாக சாசனப்படி சொத்துக்களை பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பாக சாசனத்தின் ஏ அட்டவணைச் சொத்துக்கள் பாலசந்திரனுக்கும் , பி அட்டவணைச் சொத்துக்கள் சதாசிவத்தின் வாரிசுகளுக்கும் ஒதுக்கப்பட்டன என்றால் சரிதான்.

4) தென்புறமாக இருந்த தன் பூமியை ஆறுமுக செட்டியார் ஒரு சின்ன பழனி செட்டியாருக்கு கடந்த 31-01-1962 தேதியில் கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த சின்ன பழனி செட்டியார் தன் மனைவியுடன் சேர்ந்து கடந்த 13-10-1969 அன்று அச்சொத்தை தங்கவேல் என்பவருக்கு வா.சா.ஆ. 4 கிரைய ஆவணப்படி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 கிரைய ஆவணத்தில் மேற்படி தடபாத்தியம் *"அடியிற் கண்ட பூமியில் மேல் கோட்டில் தென்வடலாக கந்தசாமி செட்டியார் பூமிக்கு போக வர வண்டி ஆட்கள் நடந்து கொள்ள தடம் விட்டுவிட வேண்டியது "* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தங்கவேலின் வாரிசுகள் தான் பிரதிவாதியும் அவரது சகோதரரிகளும் அவரது தாயாரும் ஆவர் என்றால் சரிதான். தங்கவேலின் இறப்பிற்கு பின்னிட்டு அவர்கள் மேற்படி சொத்தை அடைந்தார் என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ. 2 பாக சாசனம் ஏற்பட்ட போது தங்கவேலின் வாரிசுகள் தான் பிரதிவாதியின் சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பாக சாசனத்தில் பொது ஷரா எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பாக சாசனத்தின் பொது ஷராவில் *"மேற்படி பாகங்களுக்கு ஏற்கனவே பூமிக்கு கிழமேல் மெயின் ரோட்டில் இருந்து தென்வடலாக செல்லும் மாமூல் வண்டிப்பாதையை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ளபடி 1 மற்றும் 2 முதல் 4 வரை லக்கமிட்ட பாகஸ்தர்கள் வண்டி, வாகனங்கள் போகவர பயன்படுத்திக் கொள்ள வேண்டியது."* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ . 2 பாக சாசனத்தின் பொது ஷராவில் தான் முதல் முறையாக *'வாகனங்கள்'* என்ற சொல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) எங்கள் இரு தரப்பு அனைத்து தாய் ஆவணங்களிலும் மேற்படி தடமானது பிரதிவாதி சொத்தின் மேல் கோட்டில் தென்வடலாக இருப்பதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ. 2 பாக சாசனத்தில் பொது ஷராவில் *"கிழமேல்ரோட்டிலிருந்து 1 லக்கமிட்ட பாகஸ்தர் பாகச் சொத்து வரை சென்று பின்னர் 1 லக்கமிட்ட பாகஸ்தரின் சொத்திற்கு சென்று கிழக்காக திரும்பி 2.3.4 லக்கமிட்டவர்கள் அவர்களது பூமிக்கு 2.3.4 லக்கமிட்டவர்களது ஆட்கள். வண்டி , வாகனாதிகள் போய் வந்து கொள்வதை 1 லக்கமிட்டவர் எக்காலத்திலும் ஆட்சேபணை செய்வதில்லை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறார். "* என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பாக சாசனத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் பொது தடம் க.ச.எண்.292/2B மற்றும் 292/3A ஆகியவற்றில் அமைந்துள்ளதாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) க.ச.எண். 292/2B என்பது தான் மேற்படி பாலசந்திரன் பூமியில் மேல் கோட்டில் தென்வடல் நீளியாக அமைந்துள்ள பூமி என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 பாக சாசனப்படி மேற்படி

சதாசிவத்தின் வாரிசுகள் தங்கள் பூமியை அடைய மேற்படி பாலசந்திரன் பூமியான க.ச.எண். 292/2B ல் தெற்கே இருந்து வடக்கே சென்று அதன் பின் கிழக்கே திரும்பி அவர்களது பூமிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்படி சதாசிவம் வாரிசுகளிடமிருந்து தான் நான் அங்கு உள்ள அவர்களது முழு சொத்தையும் கடந்த 15.07.2021 அன்று வா.சா.ஆ. 3 ஆவணப்படி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அது தான் வழக்கு ஏ அட்டவணைச் சொத்து என்றால் சரிதான்.

8) வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்தில் *"முன் பத்திரப்படியும் , மாமூல் படியும் உண்டான வழிநடை, தட பாத்தியங்களும் , வண்டி , வாகனாதிகள், கனரக வாகனங்கள் போய் வந்து கொள்ளும் பாத்தியங்களும் வகையறா சகிதம்."* என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாக சாசனத்திலும் வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்திலும் பிரதிவாதியோ அவரது குடும்பத்தாரோ சாட்சியாகவோ , தரப்பினராகவோ கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாக சாசனத்திலும் வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்திலும் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் மற்றும் அவர்களது முன்பாத்திஸ்தர்கள் யாருடைய அனுமதியும் சம்மந்தமும் இன்றி நானும் என் கிரையதாரர்களும் ஏற்கனவே நடப்பில் இருந்த தடத்தின் பாத்தியங்களை அதிகப்படுத்தி ஏற்படுத்தியுள்ளது சட்டப்படியானது அல்ல என்றும் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாரை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல.

9)மேற்படி எந்த ஆவணத்திலும் தடத்தின் அளவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு பி அட்டவணைச் சொத்தில் மேற்படி தடத்தின் அகலம் 12 அடி என குறிப்பிட்டு தான் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பத்திரப்படி வழங்கப்பட்ட வண்டிதடம் ஒருபோதும் 12 அடி அகலத்தில் இருந்ததில்லை என்றும் அதில் ஒரு போதும் வாகனங்களோ, கனரக வாகனங்களோ சென்றதில்லை என்றும் சொன்னால்

சரியல்ல. நான் கிரையம் பெற்ற பின் புது உரிமை உருவாக்க தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அவ்வாறு உரிமை உருவாக்க எனக்கு அருகதை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10) நீ.சா.ஆ. 2 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடமானது இரு தரப்பு தாய் ஆவணங்களில் குறிப்பிட்டவாறு பிரதிவாதி சொத்தின் மேல் கோட்டில் பாலசந்திரன் பூமி வரை தென்வடலாக அமையவில்லை என்றால் சரியல்ல. நீ.சா.ஆ. 2 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடமானது பிரதிவாதி பூமியின் மத்தியில் கிழக்கே வளைந்து சென்று பின் வடக்கே திரும்பி செல்வதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.சா.ஆ. 2 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தடமானது பிரதிவாதியால் அவரது பூமிக்குள் அவரது தேவைக்காக ஏற்படுத்தப்பட்டது என்றும் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

11) பாலசந்திரனும் , பிரதிவாதியும் உறவினர் என்றால் சரிதான். மேற்படி உறவு முறையை கருத்தில் கொண்டு பாலசந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு மட்டும் பிரதிவாதி தன் சுய தேவைக்காக ஏற்படுத்திய தடத்தில் சென்று அனுமதி அளித்திருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுத்த அனுமதியை பாலசந்திரன் தவறாக பயன்படுத்தியதால் தான் அந்த அனுமதியை ரத்து செய்து பிரதிவாதி அவரது பூமியின் வடகோட்டில் கிழமேலாக கம்பிவேலி அமைத்து Gate போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி Gate ம் , கம்பிவேலியும் அமைக்கவில்லை . வெறும் ஓலை தான் வைத்துள்ளார். இவ்வழக்கில் நான் பிரதிவாதி அமைத்த Gate ம் ,கம்பி வேலியும் அகற்ற கோரியும் தான் பரிகாரம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் தனிப்பட்ட தடத்தில் எனக்கு உரிமையே இல்லாத போது அதில்

அமைக்கப்பட்டுள்ள Gate ம் , கம்பிவேலியும் அகற்ற கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

12)Gate ம் , கம்பிவேலியும் அமைக்கப்பட்ட சமயத்தில் பாலசந்திரன் பிரதிவாதி மீது எவ்வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வருடம் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பாலசந்திரனுக்கு Gate ம் , கம்பிவேலியும் அமைக்கப்பட்ட சமயத்தில் அவருக்கு அத்தடத்தில் உரிமை ஏதும் இல்லை என தெரிந்ததால் தான் அவர் அப்போதே வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ- 13 ஆவணங்களில் கண்டுள்ள தடத்தில் தற்போது எனக்கும் பாலசந்திரனுக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். அந்த தட உரிமையை விளம்புகை கோரியும் இவ்வழக்கில் பரிகாரம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் மேற்படி பாலசந்திரனை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

13) வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ- 13 ஆவணங்களில் கண்டுள்ள தட பாத்தியத்திற்கு மிகுந்து தன்னிச்சையாக பாத்தியங்கள் எழுதி கொண்டு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நீ.சா.ஆ. 2 வரைபடத்தில் பிரதிவாதி பூமி சிறிய ஈஸ்வரன் கோவில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் ஆறுமுக செட்டியாரால் நிறுவப்பட்டது என்றால் சரிதான். ஆறுமுக செட்டியார் சின்ன பழனி செட்டியாருக்கு கொடுத்த கிரைய ஆவணத்திலும் சின்ன பழனி செட்டியார் தங்கவேலுக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ. 4 கிரைய ஆவணத்திலும் ஆறுமுக செட்டியாருக்கு மட்டும் தன் ஆயுட்காலம் வரை மேற்படி கோவிலுக்கு சென்று வர தடம் விட்டு விட வேண்டியது என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உரிமை வா.சா.ஆ. 4 ஆவணத்தில்

*"ஆறுமுக செட்டியார் கீழ்கண்ட பூமியில் வெங்டாசல ஈஸ்வரர் கோவில் ஒன்று கட்டி இருப்பதில் அதில் ஷையார் ஜீவதிசை வரை ஷை கோவிலுக்கு போய் வர விட்டு விட வேண்டியது "* என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14)வா.சா.ஆ. 2 பாக சாசனத்திலும் என் வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்திலும் மேற்படி கோவிலை பற்றியோ அதற்கு சென்று வரும் உரிமை பற்றியோ குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. எனது முன் பத்திரமான வா.சா.ஆ. 13 எழுதப்பட்டுள்ளது. எனக்கு எந்த ஒரு ஆவணத்திலும் மேற்படி கோவிலுக்கு சென்று வரும் உரிமை வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கை பொய்யான விவரங்கள் கண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) பிரதிவாதி தன் எதிர் வழக்குரையில் கூறியுள்ள எந்த ஒரு சங்கதியையும் நான் எனது சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி